(இ) இரண்டு புகார்களில் ஒன்று பொய் என்று விசாரணையில் தெரிய வந்துள்ளது; ஒரு புகார் மீது மட்டும் குடியுரிமைச் சட்டத்தின் பிரிவு 7 (1)(டி)இன் படி குற்ற எண். 137/77-ல் மற்றும் 352 இ.பி.கோ.-வில் ஒரு வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது.

(ஈ) இவ்வழக்கு சி. சி. 521/77-ல் திருவள்ளூர் குற்றவியல் முதல் வகுப்பு நீதிமன்றத்தில் பதிவாகி விசாரணையில் உள்ளது

தஞ்சை மாவட்டத்தில் அரிசனங்களுக்கு வீட்டுமனைகள்.

*562 விஞ—திரு. அ. செல்லப்பா : மாண்புமிகு அரிசனநலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட விஞக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சை மாவட்டத்தில் குடியிருப்பு மனை இல்லாத அரிசனக் குடும்பங்களின் எண்ணிக்கை எவ்வளவு ?

(ஆ) அவர்களுக்கு இலவசமாக வீட்டுமனை வழங்கும் திட்டம் அரசிடம் உண்டா ?

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் :

(அ) தஞ்சை மாவட்ட ஆட்சியரிடமிருந்து சரியான விவரங்கள் கேட்கப்பட்டுள்ளன.

(ஆ) அவர்களுக்கு இலவசமாக வீட்டுமனை வழங்கும் திட்டம் அரசிடம் உண்டு. 1949 வருடத்திலிருந்து நில ஆர்ஜிதம் செய்யப்பட்டு இலவசமாக வீட்டுமனை வழங்கும் திட்டம் செயல் பட்டு வருகிறது. இத்திட்டத்தின்கீழ் 31—12—1977வரை, 23.724 வீட்டுமனை பட்டாக்கள் தஞ்சை மாவட்டத்தில் வழங்கப் பட்டுள்ளன.

திரு. அ. செல்லப்பா : பேரவைத் தலைவர் அவர்களே, 1977-78-லே எத்தனை பேர்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்கப் பட்டுள்ளது. 1978—79-லே எத்தனை பேர்களுக்கு வழங்க இந்த அரசு உத்தேசித்துள்ளது ?

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவர் அவர்களே, இதுவரை தஞ்சை மாவட்டத்தில் மொத்தமாக 23,724 பேர்களுக்கு வழங்கப்பட்டிருக்கிறது. 1977-78-லே எவ்வளவு பேர்களுக்கு வழங்கப்பட்டது என்கிற விவரம் இங்கே இல்லை. தனிக் கேள்வி போட்டால் சேகரித்துச் சொல்கிறேன்.

திரு. எஸ். ஆர். இராதா : பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கேள்விக்கு விடையளிக்கின்ற நேரத்தில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள், தகவல் வரவில்லை என்று தெரிவித்திருக்கிறார்கள். நான் அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன். இப்படி அரிசன மக்களுடைய கணக்குகள் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தில் இல்லை என்ற நிலையா, அல்லது தரக்கூடாது என்று அவர்கள் நினைக்கிறார்களா? இப்படி இருக்கின்ற காரணத்தினால்தான் கும்பகோணத்திலே 1967ஆம் ஆண்டு அரிசனங்களுக்கு வழங்க இருந்த வீடு கட்டும் திட்டத்தை அங்கே வராமலே இருக்கிற அளவுக்குத் தவறுகள் ஏற்பட்டன. எனவே அமைச்சர் அவர்கள் தஞ்சை மாவட்டத்திற்கு தனியாக கவனம் செலுத்தி, பல்வேறு இடங்களிலே வீட்டுமனை கட்ட உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அதே நேரத்தில் அந்த அரிசன நல இலாகா அதிகாரிகள்மீது நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவர் அவர்களே, இந்தக் கேள்வி அரசுக்கு வந்தவுடன், 4—10—1977 அன்று தஞ்சை மாவட்ட ஆட்சித் தலைவரை விவரம் கேட்டோம். 28—11—1977அன்று இலாகாவிலிருந்து மீண்டும் ஒரு தகவல் வந்தது. எண்ணிக்கைக் குறைவாக இருக்கிறது என்பதை ஆராய்ந்த பிறகு, மீண்டும் தகவல் கேட்டோம். இதுவரையில் தகவல் வரவில்லை.

இருந்தாலும் அந்த முறைகேடான தகவலை அனுப்பிய அதிகாரி மீது இந்த அரசாங்கம் தக்க நடவடிக்கை எடுக்க உத்தரவிட்டிருக்கிறது.

வீட்டு மனைகளை வழங்குவதைப் பொறுத்த வரையில், இந்த அரசாங்கம் தீவிரமாக இருக்கிறது என்பதையும், குறிப்பாக தஞ்சை மாவட்டத்தில் இந்தப் பிரச்சினை நல்லமுறையில் கவனிக்கப்படும் என்பதையும் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. எம். அண்ணாமலை ; தஞ்சை மாவட்டம் வெள்ள பள்ளத்தில் அரிசனங்களுக்கு ஒதுக்கப்பட்ட வீட்டு மனைகளை வசதி படைத்தவர்களுக்குக் கிராம அதிகாரிகள் விற்றது அரசுக்குத் தெரியுமா? ஜாம்புவன் ஓடை, துறைக்காடு, வீரன்வயல், வடக்காடு, கீழ்க்காடு, தில்லை, வெலகாம், தம்பிக்கோட்டை, இந்தப் பகுதிகளிலுள்ள மிராசுதாரர்கள் அந்தப் பகுதியிலே குடியிருக்கக்கூடிய அரிசனங்களிடத்தில் 'இந்த நிலம் எங்களுக்குத் தேவையில்லை' யென்று சோடி எழுதி வாங்கிக்கொண்டு பட்டா கொடுக்கப்படாமல் இருப்பதோடு அந்த நிலங்களில் குடி இருக்கக்கூடிய மக்கள் தென்னை மரம், ஓலை தேங்காய் போன்றவற்றைச் சேகரித்துக் கொடுக்கவேண்டுமென்று நிர்ப்பந்தப்படுத்தப்பட்டு வருகிறார்கள். அதைத் தடுத்து, பாதுகாப்பு கொடுத்து, பட்டா வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

1978 மார்ச் 14]

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் : மாண்புமிகு உறுப்பினரவர்கள் சொன்னது எதுவுமே அரசுக்குத் தெரியாது. ஆகவே, தனிக் கேள்வி போட்டால் விவரம் சேகரித்து உரிய பதிலை அளிக்கிறேன்.

திரு. எஸ். ஆர். இராதா : தலைவரவர்களே, அமைச்சர் அவர்கள் பதில் சொல்கிற நேரத்தில், இந்தக் கேள்வி கேட்கப் பட்டு 6 மாதங்கள் ஆகியும் பதில் வரவில்லையென்ற வகையிலே சொன்னார்கள். இதற்கு இவ்வளவு நாள் காலம் எடுத்துக் கொள்வதற்கு கேள்விகளுக்கு இருக்கிற விதிமுறைகளின்படி இது சரிதானா? இதில் சம்பந்தப்பட்டிருக்கிற அதிகாரிகள் மீதும், கீழே இருக்கிற ஊழியர்கள்மீதும் உடனடியாக நடவடிக்கை எடுக்க அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவரவர் களே, மாண்புமிகு உறுப்பினரவர்கள் சொன்ன கருத்தின் பேரில் தான் இந்த அரசாங்கம் உடனடியாக விளக்கம் கேட்டு உரிய நடவடிக்கை எடுக்க இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள் கிறேன்.

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : பேரவைத் தலைவர் அவர்களே, பின் தங்கிய வகுப்பில் எந்த எந்தச் சமூகங்களைச் சேர்ப்பிப்பது என்பதைப் பற்றிய சர்ச்சை இங்கே எழுந்தது. நீலகிரி மாவட்டத்திலே வாழ்கிற படகர் என்று குறிப்பிடுகிற அந்தச் சமுதாயத்தை, பின்தங்கிய வகுப்பில் (திரு. மு. கருணாநிதி : மிகப் பின்தங்கிய வகுப்பில்), மிகப் பின்தங்கிய வகுப்பில்— Most Backward Class சேர்க்கிற உத்தேசம் உண்டா என்று எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் கேட்டார்கள். அதை நிச்சயம் இந்த அரசு பரிசீலிக்கும் என்பதை இந்த அவைக்கு நான் தெரிவித்துக்கடமைப்பட்டிருக்கிறேன்.

Encroachments in Highway at Palani

*563 Thiru S. M. VASAN : Will the Hon. the Minister for Transport be pleased to state :—

(a) whether the persons occupying the places belonging to the Highways Department in Palani area have been evicted ; and

(b) the number of persons yet to be evicted ?